





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 06.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- **பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் தேவைகளை** வெற்றிகரமாக நிறைவேற்றியதற்காக, சென்னையை தலைமையிடமாகக் கொண்ட **இந்தியன் வங்கிக்கு**, தமிழக அரசானது **சிறந்த வங்கிக்கான விருதை** வழங்கியுள்ளது.
    - இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குநர் M.K. பட்டாச்சாரியா ஆவார்.

## இந்திய நிகழ்வுகள்

- **"நெகிழி கழிவுகளற்ற இந்தியாவிற்கான" கீதமானது** மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல், சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சர் **ஹர்ச வர்த்தனால் அறிமுகப்படுத்தப்பட்டது.**
    - இது 2022ம் ஆண்டில் இந்தியாவை நெகிழியற்ற தேசமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. இது 7 மொழிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- மகாராஷ்டிரா மாநிலத்தின் **பால்கார்** மாவட்டத்தில், **மற்றொரு நிலநடுக்கமானி** (Seismometer) ஏற்படுத்தப்படும் என்று **தேசிய நிலநடுக்கவியல் மையம்** (NCS – National Centre of Seismology) மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை ஆகியவை **அறிவித்துள்ளது.**
    - நாட்டின் நான்காவது நிலநடுக்கமானியானது பால்கார் மாவட்டத்தின் ஹால்டிபடா மற்றும் உதாவா சாலையின் மீது அமைக்கப்பட உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள **கென்னடி விண்வெளி மையத்திலிருந்து** ஆளில்லா கேப்சூல் குழுவுடன் **பால்கன் - 9 – ஐ விண்ணில் வெற்றிகரமாக** செலுத்தியுள்ளது.
    - இது சர்வதேச விண்வெளி நிலையத்துடன் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **சீனாவின் ஹாங்ஷூ** நகரில் வரும் **2022ம் ஆண்டு** நடைபெறவுள்ள **ஆசியப் போட்டியில் முதன்முறையாக ஓசேனியா நாடுகள்** சேர்க்கப்பட்டுள்ளன.
    - ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறும் போட்டியாக உள்ள, ஆசிய விளையாட்டு போட்டி முதன் முதலில் 1952ல் நடத்தப்பட்டது.
- குறிப்பு:
    - ஓசேனியா நாடுகள் என்பவை ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பசுபிக் பெருங்கடல் தீவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- விண்வெளி அறிவியல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் தொடர்பான அறிவை பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் இஸ்ரோவானது (ISRO) **“இளம் விஞ்ஞானி கரியகாம்”** (Yuva Vigyani Karyakram) **என்ற “இளம் அறிவியலாளர் திட்டம்” ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது**.
    - இத்திட்டமானது ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு என செயல்படுத்தப்பட உள்ளது.

## விருதுகள்

- **புதுடெல்லியில்** நடைபெற்ற புத்தாக்கம் மற்றும் நிர்வாகம் மீதான **டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் மாநாட்டின்** 3வது பதிப்பின் போது, **புதுமைக்கான கலாம் விருது 2019** வழங்கப்பட்டது.
    - சர்வதேச தரத்திலான வசதிகளுடன் நவீனப் போக்குவரத்து அமைப்பை அளித்ததற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு புதுமைக்கான கலாம் விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவராக பகவான் லால் சஷினி** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையச் சட்டம் 1993ன்

கீழ் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
  - இதற்கான அரசியலமைப்பு சரத்து – 338B ஆகும்.
- குறிப்பு:
  - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கிய சட்ட திருத்தம் - 102வது சட்டதிருத்தம்
  - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கிய சட்ட திருத்த மசோதா - 123வது சட்டதிருத்த மசோதா

We Shine Academy™